# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November- 2017

| தரம் :- 13 (2018) | வணிகக்கல்வி - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :..................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) பின்வரும் பண்புகளில் வணிகம் ஒன்றின் பண்புடன் தொடர்புபடாதது எது?

1) வீட்டின் முன்புறமுள்ள தேநீர்சாலை ஒன்றுக்காக வீட்டில் சிற்றுண்டிகள் தயார் செய்தல்.
2) பருவகால பழங்கள் சிலவற்றை தட்டுப்பாடான காலங்களில் விநியோகிப்பதற்காக சேகரித்து பானமாக்குதல்.
3) நபர் ஒருவர் தான் பயன்படுத்திய பழைய மோட்டார் வாகனத்தை விற்பனை செய்தல்.
4) நுகர்வோரின் சுவை, வடிவம், கேள்வி என்பனவற்றில் ஏற்படும் மாற்றங்கள்.
5) இலாபம் அல்லது நட்டத்தினால் தொடர்ச்சியாக ஊக்கப்படுத்தப்படல். (………)

02) அண்மையில் மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவுற்றதனால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகள், உணவு, உடை, குடிநீர் என்பன பல்வேறு பட்ட அமைப்புக்களினால் வழங்கப்பட்டது. நிலை அடிப்படையில் இச்செயற்பாட்டினை வகைப்படுத்தின்

1) முதனிலை உற்பத்தி 2) இரண்டாம் நிலை உற்பத்தி 3) மூன்றாம் நிலை உற்பத்தி
4) கைத்தொழில் உற்பத்தி 5) அகழ்வுக் கைத்தொழில் (……..…)

03) பின்வருவனவற்றுள் வணிகப்பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பமாக கருதமுடியாதது எது?

1) பண்டமாற்று 2) நேர் உற்பத்தி 3) பணப்பாவனை
4) கைத்தொழில் புரட்சி 5) தகவல் பொருளாதாரம் (………)

04) பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஆடை உற்பத்தி தொழிற்சாலையின் உற்பத்தி காரணிகளின் வகைகளினையும் Y நிரலானது அவற்றுக்கான உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A – நிலம் | 1. ஆடை தைப்பவர் |
| B – உழைப்பு | 2. ஊழியரின் பணி நேரம் |
| C – மூலதனம் | 3. நுகர்வோரின் வடிவமைப்பு மாற்றங்கள் |
| D – முயற்சி | 4. சட்ட ஆலோசனைகள் |
| E – அறிவு | 5. துணி, நூல், பொத்தான் |
| F – தகவல் | 6. நிறுவனம் |
| G – காலம் | 7. சூரிய ஒளி |

ஒவ்வொரு உற்பத்திக் காரணிகளுக்கு பொருத்தமான உதாரணத்தினை இணைக்கும் சரியான தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A – 6, B – 1, C – 3, D – 4, E – 7, F – 5, G – 2
2) A – 5, B – 7, C – 6, D – 2, E – 1, F – 4 G – 3
3) A – 4 B – 3, C – 1, D – 7, E – 5, F – 2, G – 6
4) A – 7, B – 1, C – 5, D – 6, E – 4, F – 3, G – 2
5) A – 3, B – 4, C – 7, D – 1, E – 2, F – 6, G – 5 (……....)

05) இயற்கை வளங்களுக்கு ஏற்படுகின்ற அழிவுகள் தொடர்பில் இன்று உலக மக்களின் கவனம் திரும்பியுள்ளது. இதற்கென நவீன தொழில்நுட்பங்களினூடே குறைந்த கிரயங்களுடன் உற்பத்திகளை ஆக்கி வழங்குவது தொடர்பாகவும், நாடுகளின் கலை கலாச்சார பெறுமானங்களுக்கு மதிப்பளிப்பதுடன், சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு உற்பத்திகளை ஆக்கி வழங்குவதில் கூடியகரிசனை இன்று செலுத்தப்படுவதனை காண முடிகின்றது.

மேலே தரப்பட்ட நிகழ்வின் அடங்கியுள்ள பேரினச்சூழல் காரணிகளின் எண்ணிக்கை.

*1) 3 ஆகும் 2) 4 ஆகும் 3) 5 ஆகும் 4) 6 ஆகும் 5) 7 ஆகும்* (………)

06) வணிக நிறுவனங்களுடன் தொடர்புடைய சில குணாம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

A – தொகுதிக்கடன்களை வழங்கக்கூடிய ஆற்றல்.
B – வரையறுக்கப்படாத நட்டப்பொறுப்பு
C – சட்ட ஆளுமையின்மை
D – வணிகத்தை பதிவு செய்தல் கட்டாயமானது
E – சுதந்திரமான தீர்மானம் எடுத்தல்
F – நிதிக்கூற்றுக்களைப் பிரசுரித்தல் கட்டாயமானது

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் வரையறுத்த பொதுக்கம்பனிக்குப் பொருத்தமான குணாம்சங்களை கொண்டுள்ள தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A, D, F 2) A, C, E 3) C, D, F 4) A, B, C 5) B, C, E

(………)

The National e-Learning Portal for The General Education

07) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தில் காணப்படும் பங்குடமை சம்பந்தமான ஒரு விடயம் பின்வருவனவற்றுள் எதுவெனக் கருதுகின்றீர்?

1) பங்காளருடைய பிணக்குகளுக்கான தீர்வுகள்
2) பங்காளர் எண்ணிக்கை
3) பங்குடமைகளைப் பதிவு செய்தல்
4) பங்காளர் மூலதனம்
5) பங்குடமை கலைப்பு (………)

08) பின்வருவன உலகில் அவ்வப்போது இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

- அதிசயிக்கக்கூடிய கட்டிட நிர்மாணங்கள்
- நாடுகளைக் கைப்பற்றும் யுத்தங்கள்

மேற்தரப்பட்டவற்றுடன் தொடர்புடைய செயற்பாடு பின்வருவனவற்றுள் எதுவாகும்?

1) உலகமயமாக்கல்
2) தொடர்பாடல்
3) தொழில்நுட்ப வளர்ச்சி
4) கைத்தொழில் புரட்சி
5) முயற்சியாண்மை (………)

09) வாய்ப்புக்களைத்தேடும் ஒருவர் எவ்வாறு அழைக்கப்படுவார்.

1) வணிகர்
2) கைத்தொழிலாளர்
3) முயற்சியாளர்
4) முகாமையாளர்
5) தொழில்வாண்மையாளர் (………)

10) பின்வருவனவற்றுள் ஒன்று ஏனைய நிதிநிறுவனங்களிலிருந்து வேறுபட்டுள்ளது. அவ்வாறு வேறுபட்டுள்ள நிதி நிறுவனவகை எது?

1) உரிமம் பெற்றவணிக வங்கிகள்
2) உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள்
3) உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்
4) பிராந்திய அபிவிருத்தி வங்கிகள்
5) நம்பிக்கை அலகுகள் (………)

11) பின்வரும் கூற்றுக்களுள் பணத்தின் பெறுமதி அளவீட்டுக் கருவியினை (Standard of Value) மிகச்சரியாக காட்டும் கூற்று எது?

1) கையடக்கத் தொலைபேசி ஒன்றினை ரூபா 30,000 த்திற்கு கொள்வனவு செய்தல்.
2) ஐந்தாம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கான பணத்தினை இருபத்தி ஐந்தாம் திகதி செலுத்துதல்.
3) வருமானத்தில் ரூபா 10,000த்தினை பணமாக வைத்திருத்தல்.
4) ஒரு சோடிப்பாதணிகள் ரூபா 1999.90 சதமென விலை குறித்தல்.
5) சேமிப்பு வைப்பிலிருந்து ரூபா 50,000 த்தினை மூன்று மாதகால நிலையான வைப்பில் இடுதல். (………)

12) பின்வருவன காசோலை ஒன்றின் முகப்பில் காட்டப்பட்டிருக்கும் சில தகவல்கள் ஆகும்.

A – வங்கியின் பெயரும் கிளையின் பெயரும்
B – திகதி
C – பெறுவோன் பெயர்
D – அல்லது கொண்டு வருபவருக்கு என்ற உள்ளீடு
E – காசோலையின் பெறுமானம்
F – செலுத்தவும் என்ற உத்தரவு
G – காந்த மைநிரல் இலக்கங்கள்

மேற்படி தரப்பட்டுள்ளவற்றுள் காசோலை பிறப்பிப்பவரால் பூரணப்படுத்த முடியாத தகவல்களினை மட்டும் கொண்ட தொகுதி

1) A, B, D, F 2) B, C, E, F 3) C, D, E, G 4) D, E, F, G 5) A, D, F, G (……...)

13) பின்வருவன பிரதேசமொன்றில் செயற்படும் வணிக முயற்சிகள் சில ஆகும்.

A – மொறின்ஸ்ரன் தனது சொந்தக்கட்டிடத்தில் பஞ்சு, துணிகளிலான பொம்மைகளினை உற்பத்தி செய்கின்றார்.

B – சுதன் தங்க நகை அடகுபிடிப்பதனால், தனது வணகத்தில் தொடர்ச்சியாக தங்க நகைகளினை பேணிவருகின்றார்.

C – நிரோசன் "கலியான மாலை" என்ற பெயரில் திருமணதரகு தொழிலினை தனது சொந்த தீர்மானம் மூலம் நடாத்தி வருகின்றார்.

D – றொபின்சன் இருபது தொழிலாளர்களைக் கொண்ட சிறிய இரும்புருக்கு தொழிற்சாலை ஒன்றினை நடாத்தி வருகின்றார்.

E – ரூபேட் வாடகை வண்டி ஒன்றினை அமர்த்தி யாழ்ப்பாண மரக்கறிகளை தம்புள்ள சந்தைக்கு நகர்த்துகின்றார்.

மேற்குறிப்பிட்ட வணிக முயற்சிகளில் அதன் முயற்சியாளர்களினால் காப்புறுதி செய்ய முடியாத முயற்சி எது? அல்லது எவை?

1) Aயும் Eயும் 2) Cயும் Eயும் 3) Cயும் Dயும் 4) Bயும் Cயும் 5) Dயும் Eயும்

(………)

14) பின்வருவனவற்றுள் போக்குவரத்து முறைமையுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

1) பேரூந்து நிலையமானது போக்குவரத்து தரிப்பிடத்தின் ஒரு கூறு ஆகும்.
2) புகையிரதப் பாதையானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும்.
3) ஆகாய விமானப் போக்குவரத்து சக்தியின் ஒரு கூறு ஆகும்.
4) கப்பலானது போக்குவரத்துப் பாதையின் ஒரு கூறு ஆகும்.
5) துறைமுகமானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும். (………)

15) "தொடர்பாடலில் ஊடகங்களின் பங்கு காத்திரமான ஒன்றாகும்." கீழே அட்டவணையில் X நிரலானது தொடர்பாடல் செயன் முறையின் கூறுகளையும், Y நிரலானது ஊடகத்துறை சார்ந்த தொடர்பாடல் செயன் முறையின் உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A – அனுப்புபவர் | 1. பெறப்பட்ட செய்தி தொடர்பான செயற்பாடு |
| B – செய்தி | 2. பத்திரிகை |
| C – ஊடகம் | 3. வாசகர் |
| D – பெறுபவர் | 4. பத்திரிகை நிறுவனம் |
| E – துலங்கல் | 5. பத்திரிகையில் விளம்பரப்படுத்தியவருக்கான துலங்கல் |
| F – பின்னூட்டல் | 6. ஊடகத் தகவல் |

தொடர்பாடல் செயன்முறைகளினையும் அவற்றுக்கான ஊடக உதாரணங்களையும் சரியாக இணைக்கும் தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A – 2, B – 1, C – 6, D – 4, E – 5, F – 3
2) A – 3, B – 2, C – 4, D – 5, E – 1, F – 6
3) A – 6, B – 4, C – 3, D – 1, E – 5, F – 2
4) A – 4, B – 6, C – 2, D – 3, E – 1, F – 5
5) A – 1, B – 5, C – 2, D – 3, E – 6, F – 4 (……...)

16) பின்வரும் காரணிகளுள் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத் தடைகள் தொடர்பான இயற்கைக் காரணி எதுவாகும்?

1) ஏற்றுமதி, இறக்குமதி, வரையறைகள்
2) உயர்ந்த இறுப்புக்கள்
3) கலாசார வேறுபாடுகள்
4) இறுக்கமான நாணயமாற்றுக் கொள்கைகள்
5) வியாபார உடன்படிக்கைகள். (………)

17) அபிவிருத்தியடைந்த நாடுகளால், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

1) உற்பத்திவரி   2) சுங்கவரி   3) பெறுமதி சேர்வரி
4) துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்திவரி
5) முன்னுரிமைக்கான பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை (………)

18) பின்வரும் அட்டவணையில் X நிரலானது றெபேட் ட.கேட்ஸ் என்ற அறிஞரின் முகாமைத்துவ திறன்களினையும், Y நிரலானது நிறுவனங்களில் முகாமையாளர் ஆற்றிவரும் கருமங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A – எண்ணக்கருத்திறன் | 1. ஊழியர் கருத்துக்களை செவிமடுத்தல்<br>2. நிறுவன தொடர்பாடல் நடவடிக்கைகள் |
| B – மானிடத்திறன் | 3. தலைமைத்துவம் வகித்தல்<br>4. விலகல்களை இனம் கண்டு சீர்செய்தல். |
| C – தொழில்நுட்பத்திறன் | 5. எதிர்காலம் பற்றி சிந்தித்தல்<br>6. ஊழியர்களை ஊக்குவித்தல் |

முகாமைத்துவ திறன்களினையும், முகாமையாளரது கருமங்களையும் சரியாக இணைக்கும் தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A – (1, 6), B – (2, 5), C – (3, 4)
2) A – (2, 4), B – (3, 6), C – (1, 5)
3) A – (3, 5), B – (1, 6), C – (2, 4)
4) A – (1, 5), B – (2, 4), C – (3,6)
5) A – (4, 5), B – (1, 3), C – (2,6) (………)

19) பின்வருவோர் முகாமையாளர்களின் சில வகையினர் ஆவர்

A – பணிப்பாளர்
B – கட்டளை இடும் அதிகாரி
C – காரியாலய செயற்பாட்டு முகாமையாளர்
D – தலைவர்
E – பிரதம நிறைவேற்று அதிகாரி

மேற்தரப்பட்டவர்களில் முன்வரிசை முகாமையாளராக கருதக்கூடியவர் அல்லது கருதக்கூடியவர்கள் யார்?

1) Aயும் Bயும்   2) B மட்டும்   3) Cயும் Dயும்   4) C மட்டும்   5) E மட்டும்

(………..)

20) பின்வருவனவற்றுள் எது கட்டுப்படுத்தலின் ஒரு கட்டமன்று

1) சாதனைகளை மதிப்பிடுவது
2) வித்தியாசங்களை இனம் காணுதல்
3) வளங்களை பங்கிடுதல்
4) நியமங்களை உருவாக்குதல்
5) திருத்துவதற்கான வழிகளை மேற்கொள்வது. (………)

21) பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருந்து பகுதித்தலைவராக பொறுப்பினை ஏற்றுக் கொண்ட திரு.ஸ்ரனி அவர்கள், தனது முதலாவது காலைக்கூட்டத்தில் "இதுவரை வகுப்பில் 30 மாணவர்களை கற்பித்த என்னிடம், தற்போது 200 மாணவர்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது" என குறிப்பிட்டிருந்தார். ஒழுங்கமைத்தலில் திரு.ஸ்ரனி அவர்களின் கூற்று புலப்படும் தத்துவம் யாது?

1) கட்டளைச் சங்கிலி 2) கட்டுப்பாட்டின் விசாலம் 3) கட்டளையில் ஓரினத்தன்மை
4) திணைக்களப்படுத்தல் 5) தொழிற்பிரிப்பு

(………)

22) நிறுவன நோக்கங்களினை அடைவதற்காக தொழிலாளர்களது தனிப்பட்ட மற்றும் குழு நடத்தைகளில் செல்வாக்கினைச் செலுத்தும் ஆற்றல் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

1) அதிகார கையளிப்பு 2) நிபுணத்துவ வலு 3) ஊக்கப்படுத்தல்
4) தலைமைத்துவம் 5) தொடர்பாடல் (………)

23) உற்பத்தி முகாமை மற்றும் செயல்முகாமை தொடர்பில் ஐந்து மாணவர் குறிப்பிட்ட சில கருத்துக்கள் வருமாறு.

A – செயல் முகாமையினை விட உற்பத்தி முகாமை பரந்த கருத்துடையதாகும்.
B – உற்பத்தி முகாமையானது உள்ளீட்டிற்குப் பெறுமதி சேர்ப்பதன் மூலம் வெளியீட்டினை மேற்கொள்கின்றது.
C – செயற்பாட்டு நடவடிக்கைகளை திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் என்பன செயல் முகாமை ஆகும்.
D – உற்பத்தி முகாமையுடன் ஒப்பிடுமிடத்து செயல் முகாமை பரந்துபட்ட பொருள் உடையதாகும்.
E – செயல் முகாமையானது உற்பத்திச் செயற்பாடுகளை கண்காணிப்பதுடன், மட்டுமே தொடர்புடையதாகும்.

மேற்படி கூற்றுக்களுள் உற்பத்தி முகாமை மற்றும் செயல் முகாமை தொடர்பில் சரியான கூற்றுக்களைக் குறிப்பிட்ட மாணவர் யார் அல்லது யாவர்?

1) A மட்டும் 2) Cயும் Eயும் 3) Dயும் Eயும் 4) Aயும் Eயும் 5) Bயும் Cயும் Dயும்

(………)

24) பின்வரும் அட்டவணையில் X நிரலானது செயற்பாட்டு முகாமைத்துவ தொழிற்பாடுகளையும், Y நிரலானது அவற்றினுள் அடங்கும் சில நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.

| X | Y |
|---|---|
| A – உற்பத்திதிட்டமிடல் | 1. சரக்கு மட்ட முறை |
| B – உற்பத்தி பொறியியல் | 2. வழங்குனரின் நம்பகத்தன்மை |
| C – உற்பத்திக்கட்டுப்பாடு | 3. பொருள் நவீனமயப்படுத்துதல் |
| D – பொருள் கொள்வனவு | 4. கட்டளை உற்பத்தி |
| E – ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 5. கணணி எண்சார் கட்டுப்பாடு |

செயற்பாட்டு முகாமைத்துவ தொழிற்பாடுகளையும் அவற்றில் அடங்கும் நடவடிக்கைகளையும் சரியாக இணைக்கும் தொகுதியாக அமைவது.

1) A – 1, B – 4, C – 2, D – 3, E – 5
2) A – 2, B – 3, C – 5, D – 1, E – 4
3) A – 3, B – 4, C – 5, D – 2, E – 1
4) A – 4, B – 5, C – 1, D – 2, E – 3
5) A – 5, B – 2, C – 4, D – 1, E – 3 (……....)

25) உற்பத்திச் செயன்முறையின் போது ஒத்த தன்மை கொண்ட பொறிகளையும், செயற்பாடுகளையும் ஒன்றாக வகைப்படுத்தியும் ஒவ்வாத தன்மை கொண்ட பொறிகளையும் செயற்பாடுகளையும் வேறாகவும் வகைப்படுத்தி இடம்பெறும் உற்பத்திதள அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

1) நிலையான இடதள அமைப்பு 2) உற்பத்திப்பொருள் அமைப்பு
3) செயன்முறைத் தள அமைப்பு 4) கலத்தள அமைப்பு 5) பொருட்தள அமைப்பு

(……….)

26) உற்பத்தி நிறுவனமொன்றின் செலவின வகைகள் சில கீழே தரப்படுகின்றன.

A – தொழிற்சாலை வாடகை
B – மின்சாரக் கட்டணம்
C – மூலப்பொருள் கிரயம்
D – தொழிற்சாலைக் காப்புறுதிக்கட்டணம்
E – நிலையான வரிக்கட்டணங்கள்
F – வெற்றுக்கொள்கலன் கொள்வனவு
G – நேர்கூலி

இவற்றுள் இலாபநட்டமற்ற புள்ளிப்பகுப்பாய்வில் பங்களிப்பினைக் கணிப்பதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய உருப்படிகளைக் கொண்ட தொகுதி எது?

1) A, D, E, G 2) B, C, F, G 3) C, D, F, G 4) B, D, E, G 5) D, E, F, G

(………)

27) பின்வரும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் தொடர்பான கூற்றுக்களில் மிகச்சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

1) உற்பத்தி எண்ணக்கரு, சந்தையினை தொடக்க இடமாக கொண்டிருக்கையில், சந்தைப்படுத்தல் எண்ணக்கருவோ தொழிற்சாலையினை தொடக்க இடமாக கொண்டிருக்கும்.
2) உற்பத்தி எண்ணக்கரு நியாயமான விலையினை கருத்தில் எடுக்குகையில், உற்பத்திப்பொருள் எண்ணக்கரு தரத்தினை கருத்தில் எடுக்கின்றது.
3) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு மேம்படுத்தல்களில் கவனம் செலுத்துகையில், சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கருவோ அக்கறையுடைய தரப்பினரது எதிர்பார்க்கைகளில் கவனம் செலுத்துகின்றது.
4) விற்பனை எண்ணக்கரு வாடிக்கையாளரில் கரிசனை செலுத்துகையில் உற்பத்திப்பொருள் எண்ணக்கரு உறவு முறையில் கரிசனை செலுத்துகின்றது.
5) வாடிக்கையாளர் எண்ணக்கரு தனிப்பட்ட வாடிக்கையாளரை கவனமெடுக்கையில், சந்தைப்படுத்தல் எண்ணக்கருவோ மேம்படுத்தல் உபாயங்களில் கவனம் செலுத்துகின்றது.

(………)

28) நுகர்வோரின் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கு உற்பத்திப்பொருள் ஒன்றில் காணப்படும் ஆற்றல் அல்லது பண்பு எவ்வாறு அழைக்கப்படும்

1) தரம் 2) பெறுமதி 3) திருப்தி 4) விருப்பம் 5) கேள்வி

(………)

29) வணிக நிறுவனமொன்றின் விளம்பரம் வருமாறு

"நீங்கள் விரும்பும் வடிவமைப்பில் நகைகளினை ஆக்கி வழங்க நாம் தயாராக உள்ளோம்". மேற்படி விளம்பரம் எத்தகைய சந்தைப்படுத்தல் எண்ணக்கருவுடன் ஒத்துச் செல்லும் எனக்கருதுகின்றீர்.

1) உற்பத்தி எண்ணக்கரு 2) உற்பத்திப் பொருள் எண்ணக்கரு
3) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு 4) வாடிக்கையாளர் எண்ணக்கரு
5) விற்பனை எண்ணக்கரு

(………)

30) புதிதாக மாணவர்களுக்கான உற்பத்திப் பொருள் ஒன்றினை சந்தைக்கு சமர்ப்பிக்க இருக்கும் வணிகர் ஒருவருக்கு, மாணவர்களுக்கான சந்தையில் கூட வயது, பால், வேற்று மொழிகள், கலாச்சாரங்கள், கற்கை நெறிகள் என பல பிரிவுகள் தென்படுதல், தனக்கு குழப்பத்தினை உண்டு பண்ணுவதாக கருதுகின்றார். மேற்படி பிரச்சினை பின்வருவனவற்றுள் எதுவெனக் கருதுகின்றீர்.

1) சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கருக்கள் ஆகும்.
2) உற்பத்தி மட்டங்கள் ஆகும்.
3) சந்தை துண்டமாக்கல் ஆகும்.
4) சந்தைப்படுத்தல் கலவை ஆகும்.
5) சந்தைப்படுத்தல் செயல்முறை ஆகும்.

(………)

❖ **வினா இலக்கம் 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும் போது பொருத்தமான பதங்களினை பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்பவும்.**

31) அ) வணிகமொன்றின் பிரதான கருமங்கள் இரண்டும்

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………… ஆகும்.

ஆ) ஒரு நாட்டின் …………………………………………………………………… மற்றும் ……………………………………………….. வணிகங்கள் பங்களிப்புச் செய்கின்றன.

32) அ) நாளாந்தம் பூகோளரீதியாக பெருமளவு கழிவுப்பொருட்கள் சேரும் பொருளாதாரச் செயற்பாடுகள் …………………………… , ………………………………………. ஆகும்.

ஆ) பின்வரும் சுருக்கப்பதங்களினால் வெளிக்காட்டப்படுவன யாவை?

- SDFR - ……………………………………………………………………………
- SLFR - ……………………………………………………………………………

33) அ) காப்புறுதியில் பணரீதியாக மதிப்பிடக்கூடிய இழப்பீடொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் ………………………………….. எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுவதுடன், அவ்வாறு ஏற்படுவதற்குள்ள சந்தர்ப்பத்தை ……………………………….. எனவும் அழைப்பர்.

ஆ) வணிக வங்கிகள் வாடிக்கையாளரின் நன்மை கருதி நவீன தொழில்நுட்பக் கருவிகளை வங்கிக்கு வெளியில் பொருத்துவதுண்டு, இதில் ATM என்பது …………………………………….. என அழைக்கப்படுகையில், CDM என்பது ……………………………………………… என அழைக்கப்படுவதுண்டு.

34) அ) தலைவரின் நடத்தைப்பாங்கின் அடிப்படையில் தலைவர்களை ………………………… , மற்றும், …………………………………………………… என வகைப்படுத்துவதுண்டு

ஆ) நிறுவனமொன்றின் தீர்மானம் எடுப்பதில் கூடிய அதிகாரம் மேல்மட்ட முகாமையாளரிடம் காணப்படுமாயின் அதனை ……………………………………….. எனவும், தீர்மானம் எடுப்பதில் கூடிய அதிகாரம் கீழ்மட்ட முகாமையாளர் வரை ஒப்படைக்கப்பட்டிருப்பின் அதனை ……………………………………… எனவும் அழைக்கப்படும்.

35) அ) நிறுவனங்களில் இடம்பெறும் தொடர்பாடலானது நிலைக்குத்தாக இடம்பெறத்தக்க இருவகைகள் ………………………………., ……………………………………ஆகும்.

ஆ) நாளாந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய செயற்படு கட்டுப்படுத்தலில், நடைமுறைக்கட்டுப்பாட்டினை தவிர்ந்த ஏனைய இரு கட்டுப்பாடுகளும் ………………., ……………………………………………………………… ம் ஆகும்.

36) அ) "ஒருவருக்கு ஒன்று" என்ற அடிப்படையிலான உற்பத்தி ………………………………… என அழைக்கப்படுவதுடன், "எல்லோர்க்கும் ஒன்று" என்ற அடிப்படையிலான உற்பத்தி ………………………………….. என அழைக்கப்படும்.

ஆ) பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முன்னர் பயன்படுத்தப்படக்கூடிய நவீன தொழில்நுட்ப முறை ……………………………………………………………. என்பதாகும்.

37) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரி, அல்லது பிழை எனக் குறிப்பிடுக.

| கூற்றுக்கள் | சரி / பிழை |
|---|---|
| 1) தட்டையான ஒழுங்கமைப்பு காணப்படுமாயின் அங்கு விரிந்த விசால அளவினைக் காணமுடியும். | …………………. |
| 2) உற்பத்திப் பொருள் வரிசை வேலை உற்பத்தியில் ஒன்று மட்டும் காணப்படுகையில், பாய்ச்சல் உற்பத்தியில் பல்வகையாக இருப்பதுண்டு. | …………………. |
| 3) ABC பகுப்பாய்வானது பொருள் உற்பத்திகளின் பெறுமதி, இடவசதிகளினை கருத்தில் கொண்டதாகும். | …………………. |
| 4) முரண்பாடான பண்புகளைக் கொண்ட அனைத்துச் சந்தைகளையும், சமூகப்பண்புகளுடன் கூடிய குழுக்களாக வகைப்படுத்துதல் இலக்குசந்தை எனப்படும். | …………………. |

38) அ) 1) மறு கட்டளை மட்டம் = ……………………………..X உச்சக்கட்டளைக் காலம்.

2) ………………………… = அலகு விற்பனைவிலை – அலகு மாறும் செலவு.

ஆ) பொருள் கட்டளை இடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து களஞ்சியசாலைக்குக் கிடைக்கும் வரையில் உள்ள காலம் ………………………………………. எனப்படும்.

39) செயல் முகாமைத்துவத்தில் உற்பத்தி முறைகள் தொடர்பிலான பின்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை பூரணப்படுத்துக.

| நியதி | வேலை உற்பத்தி | பாய்ச்சல் உற்பத்தி |
|---|---|---|
| 1) வெளியீட்டின் அளவு | …………………………… | …………………………… |
| 2) ……………………… | ……………………………. | ஒருதனி உற்பத்திப்பொருள் |

40) அ) சரக்கிருப்புக்களை பூச்சிய மட்டத்தில் பேணுவதன் மூலம் கட்டுப்படுத்தல் ………………………………. முறை எனவும், நவீன கணணி தொழில்நுட்பம் ஊடாக இருப்புக்களை கட்டுப்படுத்தல் …………………………………. எனவும் அழைக்கப்படும்.

ஆ) குறைவான ……………………….. காரணமாகவும், விரிவான ………………………...... காரணமாகவும் இலத்திரனியல் வணிகம் இன்று பிரபல்யமடைந்து வருகின்றது.

❖ *41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளை எழுதுக.*

41) வணிகச்சூழலைக் கற்றுக்கொள்வதனூடாக வணிகரொருவர் பெற்றுக்கொள்ளும் நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

42) இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு உருவாக்கப்படும் அத்தனை கம்பனிகளையும் ஒப்பிடும் போது பயன்படுத்தத்தக்க நியதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

43) முயற்சியாண்மைப் பண்புகளையும், திறன்களையும் விருத்தி செய்து கொள்வதற்கான முறைகள் யாவை?

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

The National e-learning Portal for The General Education

44) பங்குடமையொன்றில் பின்வரும் நிலைமைகளுக்கு பிரயோகிக்கத்தக்க சட்டங்களை அருகே குறிப்பிடுக.

1) ரூபா 2 மில்லியன் மூலதனம் ஈடுபடுத்தப்பட்டிருத்தல்

……………………………………………………………………………………………..

2) உச்சப்பங்காளர் எண்ணிக்கை 20 ஆக இருத்தல்.

……………………………………………………………………………………………..

3) உழைக்கின்ற இலாபங்களை பங்காளரிடையே பங்கிடுதல்.

……………………………………………………………………………………………..

4) பங்குடமைக்கு பொதுப்பெயர் ஒன்றினை சூட்டியிருத்தல்

……………………………………………………………………………………………..

45) பிரச்சினை ஒன்றினை இனம் கண்டதன் பின்னர் தீர்மானம் ஒன்றினை எடுப்பதற்காக முகாமையாளர் பின்பற்றும் படிமுறைகளினை குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………………..

46) நிறுவன முகாமையாளர் ஒருவர் அதிகாரக் கையளிப்பின் அளவினைத் தீர்மானிக்குகையில் கருத்தில் கொள்ளும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………………..

47) வணிகமொன்றுக்கு உற்பத்தித்திறன் முக்கியத்துவமாக இருப்பதற்கான காரணங்கள் நான்கினைத் தருக.

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………………..

48) தரக்கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படக்கூடிய நுட்ப முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………………..

49) சந்தைத் துண்டமாக்கலின் பயனுறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நான்கு தேவைப்பாடுகளை எழுதுக.

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………………..

50) சந்தைப்படுத்தலினால் வணிகர் ஒருவருக்கு கிடைக்கும் நான்கு நன்மைகள் யாவை?

1) ……………………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………………..

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | வணிகக்கல்வி - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

*01.*

1) அ) முறைசார்ந்த வணிக அமைப்பொன்றின் பொதுவான குணாம்சங்கள் நான்கினைப் பட்டியலிடுக.

ஆ) உற்பத்திப் பொருட்களானவை பொருட்கள், சேவைகளுக்கு மட்டும் வரையறுக்கப் பட்டவையல்ல, உற்பத்திப் பொருட்களாகக் கருத்திற்கொள்ளத்தக்க பொருட்கள், சேவைகள் அல்லாதன நான்கினைப் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

2) அ) மனித விருப்பங்கள் பல்வேறுபட்ட வகைகளாக இருப்பதற்கான காரணங்கள் நான்கினைப் பெயரிட்டுக் காட்டுக.

ஆ) சேவையின் பிரதான பண்புகளில் ஒன்று வழங்குபவரைப் பொறுத்து வேறுபடுவதாகும். ஏன் இவ்வாறு பொருட்களைப் போலன்றி சேவைகள் வேறுபட்டமைகின்றன?

(04 புள்ளிகள்)

3) "வூட்பலஸ்" என்பது பாரிய அளவில் தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு வணிகமாகும். இவ்வணிகம் மரங்களை அறுத்து வீடு மற்றும் அலுவலகங்களுக்கான அழகான தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.

அ) வூட்பலஸ் வணிகத்தில் பயன்படுத்தப்படும் பண்டங்களில் கைத்தொழில் பொருள் வகைப்படுத்தலில் இயந்திரங்கள் மற்றும் அரிமரம் என்பனவற்றுக்கான பொருத்தமான வகைப்படுத்தல் முறைகளைத் தருக.

ஆ) வூட்பலஸ் வணிகத்தின் தளபாட உற்பத்திப் பொருட்களை நுகர்பொருட்களின் வகையில் எப்பகுதிக்குள் அடக்க முடியும். காரணம் தருக.

(04 புள்ளிகள்)

4) "சமூகப்பொறுப்பு தொடர்பிலான பிரசித்தப்படுத்தல், ஓர் மறைவான விளம்பரம் ஒன்றாகும்."

அ) வணிகங்களால் நிறைவேற்றப்படும் எவையேனும் நான்கு சமூகப்பொறுப்பு தொடர்பான பிரசித்தப்படுத்தலுக்கு உதாரணங்கள் தருக.

ஆ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் ஊடாக வணிகத்திற்கு கிடைக்கப்பெறும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) இலங்கையில் பெண்கள் வேலைக்கு செல்லும் வீதாசாரம் அதிகரித்துச் செல்வதன் மூலம் வாய்ப்பினைப் பெறும் கைத்தொழில் ஒன்றையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கக் கூடிய கைத்தொழில் ஒன்றையும் பெயரிட்டு, அதற்கான காரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20 புள்ளிகள்)

02.

1) "கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் போது "4R" எண்ணக்கரு பிரயோகத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கு முயற்சி செய்வது தொடர்பில் சர்வதேசரீதியாக அரசுகள் கவனம் செலுத்துகின்றன"

அ) "4R" பிரதிநிதித்துவப் படுத்துவனவற்றை தனித்தனியே குறிப்பிடுக.

ஆ) மேலே நீர் குறிப்பிட்டனவற்றுக்கு ஒவ்வொரு கழிவகற்றல் நடைமுறைசார்ந்த உதாரணம் தருக.

(04 புள்ளிகள்)

2) "இலங்கையில் சில வணிக நடவடிக்கைகள் நுகர்வோருக்கும் பொருளாதாரத்திற்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டு இயங்குவதனை காணமுடிகின்றது."

அ) வணிக நடவடிக்கைகளின் பாதகமான தாக்கங்கள் நான்கினைத் தருக.

ஆ) மேற்குறிப்பிட்ட பாதகமான தாக்கங்கள் தொடர்பில் நுகர்வோரும், அரசும் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புக்கள் தலா இரண்டு வீதம் தருக.

(04 புள்ளிகள்)

3) நிதிக்கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது பின்பற்றும் கருவிகளில் கடன்கட்டுப்பாடு என்பதும் பிரபல்யமான ஒன்றாகும். இவ்வாறு கடன்கட்டுப்பாட்டிற்கு பின்பற்றும் இரு முறைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

4) அ) தற்போது இலங்கையின் கூட்டுறவுத்துறையின் நடைமுறைப் பிரச்சினைகள் இரண்டினைத் தருக.

ஆ) "தனியார் துறை தொழில் நிறுவனங்களில் தனிவியாபாரம் பங்குடமை என்பனவற்றுடன் ஒப்பிடுமிடத்து மிகக்கூடிய அனுகூலங்களை வரையறுத்த பொதுக்கம்பனிகளே கொண்டிருப்பதுண்டு". மேற்படி கூற்றுக்கு சார்பான எவையேனும் இரண்டு கருத்துக்களை முன்வைக்குக.

(04 புள்ளிகள்)

5) அ) அங்கீகார வணிகத்திலிருந்து அங்கீகாரம் பெற்றவருக்குக் கிடைக்கக்கூடிய நான்கு அனுகூலங்களை விபரிக்குக.

ஆ) அங்கீகாரம் பெறுபவரைத் தெரிவு செய்யும் போது அங்கீகாரம் வழங்குபவரால் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய நான்கு விடயங்களை எழுதுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

*03.*

1) “பொருளாதார பிரச்சினைகளுக்கு புதிய தீர்வினைக் காணக்கூடிய தன்மைகள் முயற்சியாண்மையில் இருத்தல் வேண்டும்”.

அ) எவையேனும் பொருளாதாரப் பிரச்சினைகள் நான்கினைத் தீர்ப்பதற்கு முயற்சியாண்மைகள் ஆற்றும் பங்களிப்புக்களை தனித்தனியே குறிப்பிடுக.

ஆ) வெற்றியடைந்த பாரிய முயற்சியாளர்கள், “போட்டி இல்லையெனில் இவ்வளவு வெற்றிகளை ஈட்டியிருக்க முடியாது” என அடிக்கடி கூறிக்கொள்வர். பொதுவாக போட்டி, வணிகத்திற்கு அச்சுறுத்தல் எனினும், எவ்வாறு அது வாய்ப்புக்களை ஈட்டிக் கொடுக்கும் என கருதுகின்றீர்.

*(04 புள்ளிகள்)*

2) “சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் வெற்றியடைவதில் அல்லது தோல்வியடைவதில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துவதுண்டு.”

அ) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் வெற்றியடைவதில் செல்வாக்கு செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் தோல்வியடைவதில் செல்வாக்கு செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

3) அ) காசோலையில் புறக்குறிப்பிடல் தேவைப்படுகின்ற எவையேனும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

ஆ) ஊழியர் சேமலாபநிதியத்திற்கும் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) இடையிலான இரண்டு வேறுபாடுகளை எழுதுக.

*(04 புள்ளிகள்)*

4) அ) கடன் அட்டைகளைப் பயன்படுத்துவதனால் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் இரண்டு அனுகூலங்களையும், இரண்டு பிரதி கூலங்களையும் குறிப்பிடுக.

ஆ) கடனட்டைப் பாவனையினை அதிகரிக்கச் செய்வதற்கு வங்கியாளர்கள் பின்பற்றக்கூடிய நான்கு தந்திரோபாயங்களைத் தருக.

*(04 புள்ளிகள்)*

5) அ) வணிகங்களின் வெற்றிக்கு மத்தியவங்கியின் தொழிற்பாடுகள் உதவுகின்ற எவையேனும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

ஆ) வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கல் என்பனவற்றுக்கு மேலாக, வணிக வங்கிகளினால் வணிகச் செயற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும் எவையேனும் நான்கு சேவைகளைக் குறிப்பிடுக.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 5X4=20புள்ளிகள்)*

*04.*

1) அ) பின்வரும் இரு காப்புறுதி செய்பவர்களினால் முன்மொழியப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகள் காப்புறுதி நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டன.

- ஏனோஸ் என்பவருக்கு ஒரேயொரு மூத்தசகோதரர் உறவினராக இருந்தாலும், அவரது ஆயுளை ஏனோஸ் காப்புறுதி செய்ய முடியாது.

- தீ மற்றும் வெடிக்கக்கூடிய பொருட்கள் என்பனவற்றினால் பாதுகாப்புப் பெறக்கூடிய காப்புறுதி ஒப்பந்தமொன்றைப் பெற்றிருந்த றொசான் என்பவரது வணிகம் தீவிரவாதிகளின் செயற்பாடு காரணமாக சேதத்திற்குள்ளானது. சேதத்திற்கான இழப்பீட்டினை காப்புறுதி செலுத்த மறுத்தது.

ஏனோஸ், மற்றும் றொசான் ஆகிய காப்புறுதி செய்பவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமைக்கு சார்பான காப்புறுதித் தத்துவங்களைக் குறிப்பிடுக.

ஆ) “நட்டம் ஏற்படக்கூடிய நிகழ்தகவு இடர் ஆகும்.”
பின்வருவன மாணவர் சிலரினால் எழுதித்தரப்பட்ட இடர்கள் சில ஆகும்.

A – திருட்டுப்பயம்

B – வயதாதல்

C – லொத்தர் சீட்டு வெல்லப்படவில்லை

D – பணிநேரம் ஊழியர் விபத்துக்குள்ளாதல்

E – பாடகரின் குரல்

F – இறப்பு

G – கொடுத்த கடன் அறவிடமுடியாமை

H – வீட்டிற்கு பூசிய வர்ணம் வெளிறல்

மேற்படி இடர்களை காப்புறுதி செய்யக்கூடியவை, காப்புறுதி செய்ய முடியாதவை என வகைப்படுத்திக்காட்டுக.
(உமது விடைக்கு பின்வரும் மாதிரி அட்டவணையினைப் பயன்படுத்துக)

| காப்புறுதி செய்யக்கூடிய இடர் | காப்புறுதி செய்யமுடியாத இடர் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(04 புள்ளிகள்)

2) அ) முகாமையாளர் ஒருவர் நடுத்தரமட்ட முகாமையாளர்களுடன் அவசரமான கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்துள்ளார். இது தொடர்பில் அவரது பிரத்தியேக செயலாளர் செய்தியினை தயார் செய்கையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?

ஆ) வணிகர் ஒருவர் பொருட்களை நகர்த்திச் செல்லும் போது தனது கைப்பேசியில் “பூகோள இட நிலைப்படுத்தல் முறைமை” (Global Positioning System – GPS) பயன்பாட்டினால் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) அ) விற்பனையகங்களற்ற சில்லறை வியாபாரங்கள் (Non store Retailing) என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) மேற்படி விற்பனையகங்களற்ற சில்லறை வியாபாரங்களுக்கு எவையேனும் இரு உதாரணங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

4) அ) உலகில் உள்ள சிலநாடுகள் வலயரீதியாக ஒன்றிணைந்து சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகளினை ஏற்படுத்தி வருகின்றன. இவ்வாறான உடன்படிக்கைகள் மூலம் வணிகங்களுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களை தருக.

ஆ) இலத்திரனியல் வணிகத்தினால் நுகர்வோருக்கு கிடைக்கும் நான்கு அனு கூலங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

5) அ) இலத்திரனியல் வியாபாரம் நடைபெறும் பின்வரும் முறைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

i) குடிமக்களிடமிருந்து அரசிற்கு (C2G)
ii) வணிகத்திடமிருந்து அரசிற்கு (B2G)
iii) வணிகத்திலிருந்து வணிகத்திற்கு (B2B)
iv) நுகர்வோரிடமிருந்து நுகர்வோருக்கு (C2C)

ஆ) இலத்திரனியல் வியாபாரத்தின் நடைமுறைகளை குறிப்பிட்டுக் காட்டுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20புள்ளிகள்)

## பகுதி II

05.

1) அ) ''சரியான கருமங்களைச் சரியான வழியில் செய்தல் முகாமைத்துவம் ஆகும்.'' என பீற்றர் டிறக்கர் குறிப்பிட்டுள்ளார், இதில் உள்ளடக்கியிருக்கும் அடிப்படை முகாமைத்துவக் கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வினா ''அ'' இல் நீர்குறிப்பிட்ட கூறுகளை அளவிடுவதற்கு நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடிய நியதிகள் இரண்டு வீதம், ஒவ்வொரு கூறுக்கும் தனித்தனியே குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) ''முகாமைத்துவம் இன்று சகல துறைகளிலும் முக்கியத்துவம் பெற்று வருவதுடன், முகாமைத்துவத் தொழிற்பாடுகளும் கூட ஒன்றுடனொன்று பரஸ்பர தொடர்புடையனவாகும்.''

அ) முகாமையின் அடிப்படைத் தொழிற்பாடுகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்பினை விளக்குக.

ஆ) முகாமைத்துவம் இன்று முக்கியத்துவம் பெற்று வருவதற்குரிய காரணங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

3) அ) நிறுவனங்கள் தமது நிறுவனக்கட்டமைப்புக்களை கூம்பு வடிவில் (Pyramid shape) எடுத்துக் காட்டுவதுண்டு. இவ்வாறு கூம்புவடிவிலான நிறுவனக் கட்டமைப்பு புலப்படுத்தும் இரண்டு அடிப்படை விடயங்களைக் குறிப்பிடுக.

ஆ) ''பொதுவாக நிறுவனமொன்றின் அனைத்து மட்ட முகாமையாளரிடமும் மானிடத்திறன்கள் சம அளவில் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.'' இக்கருத்திற்கு சார்பான இரண்டு விடயங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

4) பின்வருவன பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரது முகாமைத்துவ வகிபாகங்களுக்கான சில செயற்பாடுகள் ஆகும். இவற்றை ஹென்றி மின்ற்ஸ் பேர்க்கின், முகாமைத்துவ வகிபாகம் மற்றும் நடவடிக்கை எதுவென தனித்தனியே குறிப்பிட்டுக்காட்டுக.

அ) பாடசாலையில் பகுதி தலைவர்களுக்கிடையே பணிகளை மாற்றியமைத்தல்.

ஆ) திறமையான ஆசிரியர்களை ஆசிரியர் தினத்தில் கௌரவித்தல்.

இ) மன்றப் பொறுப்பாசிரியர்களிடம் ஆண்டுச் செயற்பாட்டறிக்கைகளைக் கோருதல்.

ஈ) விஞ்ஞான ஆய்வு கூடத்தினை புனரமைத்து திறந்து வைத்தல்.

உ) மாகாண மட்டப்போட்டிகளில் பெற்ற சாதனைகளுக்காக பத்திரிகைகளுக்கு செவ்வி வழங்குதல்.

ஊ) பழையமாணவர் அன்பளிப்புச் செய்த கணணிகளை உரிய பகுதிகளுக்கு பங்கிடுதல்.

எ) பாடசாலையின் வளர்ச்சிக்காக கல்விப்புலம் சார்ந்தவர்களுடன் தொடர்புகளைப் பேணுதல்.

ஏ) பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள் பற்றிய தகவல்களை அரசசார்பற்ற நிறுவன மொன்றுக்கு வழங்குதல்.

(04 புள்ளிகள்)

5) அ) நிறுவனங்கள் திட்டமிடலின் ஊடாகவே உபாயரீதியிலான தோற்றங்களை (Strategic forms) முன்வைப்பதுண்டு. அத்தகைய எவையேனும் நான்கு உபாயரீதியான தோற்றங்களினைக் குறிப்பிடுக.

ஆ) திட்டமிடலின் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20புள்ளிகள்)

06.

1) அ) பகுத்தறிவான தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் காணத்தக்க நான்கு நடைமுறைப் பிரச்சினைகளை எழுதுக.

ஆ) தீர்மானமொன்றினை வெற்றிகரமாக அமுல்படுத்த வேண்டுமாயின் அது கொண்டிருக்க வேண்டிய சிறப்பம்சங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

2) புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தேனி பூட்சிற்றி வணிகத்தின் உரிமையாளர் திரு.R.தனுஜன் அவர்கள் தினசரி வாடிக்கையாளருக்காக வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்த பொருட்களை பொருத்தமான தட்டுக்களில் வகைப்படுத்தி அடுக்கி வைத்தல் தொடர்பில் குழப்பமடைந்துள்ளர்.

அ) மேற்படி வணிகரின் பிரச்சினைக்கு ஒழுங்கமைத்தலில் தீர்வாக குறிப்பிடக்கூடிய தொழிற்பாடு எது எனக் கருதுகின்றீர்.

ஆ) மேற்படி உம்மால் குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டினை உரியவாறு அமுல்படுத்துகையில் கிடைக்கத்தக்க அனுகூலங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

3) அ) சிறு குறிப்பு எழுதுக.

- கட்டளைச்சங்கிலி
- கட்டளையில் ஓரினத்தன்மை

ஆ) ஒடுங்கிய கட்டுப்பாட்டு அகல்வுடன், உயர்ந்த நிறுவனக் கட்டமைப்பினை (Tall organization) கொண்டிருத்தலின் அனுகூலம் இரண்டினையும், விரிந்த கட்டுப்பாட்டு அகல்வுடன், தட்டையான நிறுவன கட்டமைப்பினை (Flat organization) கொண்டிருத்தலின் பிரதி கூலம் இரண்டினையும் குறிப்பிடுக.

(04 புள்ளிக்ள)

4) அ) ஊழியர்சார் தலைமைத்துவ பாங்குடைய (Employee oriented Leadership Style) தலைவர்கள், நிறுவன இலக்குகளை அடைவதற்கு பின்பற்றும் உபாயரீதியிலான படிகளினைக் குறிப்பிடுக.

ஆ) ஊக்கப்படுத்தலினால் வணிகங்களுக்கும், ஊழியருக்கும் கிடைக்கும் இவ்விரண்டு நன்மைகளை தனித்தனியே குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

5) அ) கட்டுப்படுத்தல் படிமுறையொன்றின் பலவீனங்களைக் குறிப்பிடுக.

ஆ) கட்டுப்பாட்டு முறைகளில் ஒன்றாகிய முந்திய மீளூட்டல் (Feed forward Controlling) எடுக்கப்படக்கூடிய எவையேனும் நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20புள்ளிகள்)

07.

1) கட்டிட ஒப்பந்தக்காரரான கிசான் என்பவர் தனது முன்னைய செயற்திட்டங்களின் போது கட்டட மூலப்பொருட்கள் வீணானமையும், குறித்த நேரத்தில் செயற்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாது போனமையையும் கண்டறிந்தார். எதிர்கால செயற்திட்டங்களின் போது மூலப்பொருட்கள் வீணாகுவதைக் குறைப்பதற்கும் உரிய காலப்பகுதியினுள் செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்குமென இவர் பின்பற்றத்தக்க கட்டுப்பாட்டு முறைகள் இரண்டு வீதம் குறிப்பிடுக

(04 புள்ளிகள்)

2) அ) வேலை உற்பத்தியின் இரு அனுகூலங்களையும், இரு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

ஆ) வேலை உற்பத்தியிலிருந்து பாய்ச்சல் உற்பத்திக்கு மாறுவதன் நான்கு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) அ) உற்பத்தி நிறுவனமொன்று தனது இரும்பு மட்டத்தினை தீர்மானிக்குகையில் கருத்திற்கொள்ளும் காரணிகள் யாவை?

ஆ) பொதுவாக நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் சரக்கிருப்பு கட்டுப்பாட்டு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) அ) இலாபநட்டமற்ற புள்ளிப்பகுப்பாய்வின் போது கருத்தில் கொள்ளப்படத்தக்க உருப்படிகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) இலாபநட்டமற்ற புள்ளிப்பகுப்பாய்வின் முக்கியத்துவத்திற்கான நான்கு காரணங்களைத் தருக.

(04 புள்ளிகள்)

5) அ) உற்பத்தி நிறுவனமொன்று இட அமைவினைத் தெரிவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?

ஆ) உற்பத்தித்தள அமைவு வகைகள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20புள்ளிகள்)

08.

1) அ) சந்தைப்படுத்தல் மைய எண்ணக்கருக்களில் பரிமாற்றல் என்பதும் முக்கியமான ஒன்றாகும். பரிமாற்றல் தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய தேவைப்பாடுகள் யாவை?

ஆ) உற்பத்திப் பொருளின் தரம் என்பது நுகர்வோரது நோக்கில் பல பிரிவுகளின் சேர்க்கையாகும். எவையேனும் நான்கு தரம் தொடர்பிலான சேர்க்கைகளினை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

2) அ) கடந்த சில ஆண்டுகளாக சவர்க்கார உற்பத்தி நிறுவனமொன்றின் விற்பனையில் படிப்படியானதொரு வீழ்ச்சி, காணப்படுகின்றது. இந்நிறுவனம் விற்பனையினை அதிகரிக்கச் செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய நான்கு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுக.

ஆ) முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் முக்கிய நான்கு கூறுகளும் யாவை?

(04 புள்ளிகள்)

3) அ) ஆடை உற்பத்தித் தொழிற்சாலையொன்று, ஆடைச்சந்தையினை துண்டங்களாக்குவதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படைகள் நான்கினை உதாரணங்களுடன் விளக்குக.

ஆ) மேற்படி, சந்தைகளை துண்டமாக்குவதனால் ஆடை உற்பத்தியாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

4) யதுப்பிரியன் என்ற வணிகர் பொலித்தீன் பாவனைக்கு பதிலாக புதிய உக்கக்கூடிய பொதியுறைகளை சந்தைக்கு வழங்க முன்வந்துள்ளார். இவர் கருத்தில் எடுக்க வேண்டிய சந்தைப்படுத்தல் கலவை மாறிகளைக் குறிப்பிட்டு அதன் ஆக்கக்கூறுகள் தலா இரண்டு வீதம் தருக.

(04 புள்ளிகள்)

5) அ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தயார் செய்யப்படும் பொதியொன்றின் சுட்டுத்துண்டில் காட்டப்பட வேண்டிய தகவல்கள் யாவை?

ஆ) இலங்கை தபால் சேவையில், வெளிநாடுகளுக்கு பொதிகளை பதிவுத்தபாலில் அனுப்பும் போது அனுப்புபவரது சிட்டையிலும் பொதியிலும் ''கண்காணிப்பு இலக்கம்'' கொண்ட (Tracking Postel Bar Code) ஸ்ரிக்கர் ஒட்டப்படுவதுண்டு. இதன் அனுகூலங்கள் இரண்டினைத் தருக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 5X4=20புள்ளிகள்)